


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | செப்டம்பர் 12, 2019 | புரட்சி 18 | முழக்கம் 35 | விலை: ரூ.3.00


## ‘சந்திரயான்-2’: அறிவியலும் மூடநம்பிக்கையும்

இஸ்ரோ விஞ்ஞானிகள் நிலவின் தென்துருவப் பகுதியை ஆய்வு செய்ய அனுப்பிய சந்திரயான்-2, கடைசி நொடியில் பின்னடைவை சந்தித்ததாக தகவல்கள் வந்தன. ‘சந்திரயான்-2’இல் கலன், லேண்டர், ஆய்வு ஊர்தி என்ற மூன்று முக்கிய பகுதிகள் இடம் பெற்றுள்ளன. இதில் விக்ரம் என்று பெயர் சூட்டப்பட்ட லேண்டரின் தொடர்பு கடைசி நேரத்தில் துண்டித்து போனது. இப்போது அதன் இருப்பிடம் கண்டறியப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். “திட்டம் முழுமையாக தோல்வி அடைய வில்லை; வெற்றிக்கு மிக அருகில் இருக்கிறோம்; விரைவில் லேண்டர் தொடர்பு மீட்கப்படும்” என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அறிவியலுக்கு பின்னடைவுகள் தற்காலிகம்தான்; அது எப்போதும் முன்னேறிச் செல்லும். ‘சந்திரனை’ கடவுள்கள் பட்டியலில் சேர்த்துள்ள நாடு இது. சந்திரனைப் பாம்பு விழுங்குவதுதான் சந்திரகிரகணம் என்று நம்பி அன்று முழுக்குப் போட்டு ‘பாவத்தை’க் கழிக்கும் மூட நம்பிக்கை இப்போதும் இருக்கிறது. இஸ்ரோ விஞ்ஞானிகள் சிலரும் இந்த நம்பிக்கைகளை வெளிப்படுத்தவே செய்கிறார்கள். ‘சந்திரயான்-2’ திட்டத்தை ஏழுமலையானிடமும், உடுப்பி மட பார்ப்பன சங்கராச்சாரியிடமும் கொண்டு போய் ‘ஆசி’ பெற்றார்கள். அதற்குப் பிறகும் பின்னடைவு இருக்கவே செய்தது. மூடநம்பிக்கைகளை அறிவியலோடு இணைப்பது சமூகத்தின் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க பெரும் தடையாகிவிடும். எனவேதான் அரசியல் சட்டம் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுப்பதை குடிமக்களின் கடமையாக வலியுறுத்துகிறது.

ஆம்ஸ்ட்ராங் என்ற மனிதர் முதலில் நிலவில் கால் பதித்தபோது ‘அது உண்மையல்ல; புரளி’ என்று தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் பிரச்சாரம் செய்தார்கள். இப்போது ‘சந்திரன்’ ஒரு கடவுள். அதை நெருங்கவே முடியாது என்றெல்லாம் பார்ப்பனர்கள் முன்புபோல பேச முடியாது; மக்கள் எள்ளி நகையாடுவார்கள். அறிவியல் சிந்தனை முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

## உச்சநீதிமன்றம் ‘பாகுபாடு’ நீதிபதி பானுமதி கேள்வி

உச்சநீதிமன்றத்திற்கான நீதிபதிகள் தேர்வில் சீனியாரிட்டி புறக் கணிக்கப்படுவதாக உச்சநீதிமன்ற மூத்த நீதிபதி பானுமதி குற்றம்சாட்டியுள்ளார். மூத்தோர் முன்னுரிமைப்படி இல்லாமல், மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுதாகரை புறக்கணித்து, இமாச்சல் பிரதேச தலைமை நீதிபதியான வி.ராமசுப்ரமணியத்தை (இவர் ஒரு பார்ப்பனர்) கொலிஜியம் பரிந்துரைத்தது ஏன் என்றும் நீதிபதி பானுமதி கேள்வி எழுப்பியுள்ளார்.

தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையில் ஆகஸ்ட் 28இல் நடந்த கொலிஜியம் கூட்டத்தில், ரவீந்திர பட், வி. ராமசுப்பிரமணியன், கிருஷ்ணா முராரே மற்றும் ஹிரிஷிகேஷ் ராய் ஆகிய 4 பேரையும் உச்சநீதி மன்ற நீதிபதிகளாக நியமிக்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்த பரிந்துரைகளில் சீனியாரிட்டி பின்பற்றப்படவில்லை என உச்சநீதிமன்ற நீதிபதிகளில் ஒருவரான பானுமதி குற்றம் சாட்டியுள்ளார்.

சீனியாரிட்டி அடிப்படையில் இமாச்சல பிரதேசத்தின் தலைமை நீதிபதி ராமசுப்பிரமணியன் 42ஆவது இடத்தில் உள்ளதாகவும், அதே சமயம் மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக உள்ள சுதாகர் 3ஆவது இடத்தில் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சுதாகருக்கான சீனியாரிட்டியை எப்படி புறக்கணிக்கலாம் என்றும் நீதிபதி பானுமதி கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் 6ஆவது மூத்த நீதிபதியான பானுமதி கொலிஜியம் குழுவில் இடம் பெறவில்லை. தமிழகத்தைச் சேர்ந்த இவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் பணியாற்றியவர் என்பதால், அதே நீதிமன்றத்தில் பணியாற்றிய ராமசுப்பிரமணியன் தேர்வு குறித்து இவரிடம் கருத்து கேட்கப்பட்டுள்ளது. அப்போது தனது அதிருப்தியை நீதிபதி பானுமதி வெளிப்படுத்தியுள்ளார்.

75 நீதிபதிகளைக் கொண்ட சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி பொறுப்பில் இருந்த தகில் இரமணி, 3 நீதிபதிகளே கொண்ட மேகாலயா உயர்நீதி மன்ற நீதிபதியாக ‘பொலிஜியம்’ மாற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அவர் உயர்நீதிபதி பதவியிலிருந்து விலகி விட்டார்.

# விநாயகன் அரசியல் ஊர்வலத்தை நிறுத்து!




## புத்தர் சிலைகளுடன் கழகம் ஆர்ப்பாட்டம்–கைது

மதத்தை அரசியலாக்கும் விநாயகன் சிலை ஊர்வலங்கள் தமிழ்நாட்டில் பதட்டத்தை உருவாக்கி வருகிறது. வணிகர்கள், இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சியினரால் நன்கொடை கேட்டு துன்புறுத்தப்படுகின்றனர்; தாக்கப்படுகின்றனர். இந்து அரசியல் அமைப்புகளே தங்களுக்குள் மோதிக் கொள்கின்றன. போலி தமிழ்த் தேசியத்துக்கு எதிராகவே இந்த ஆண்டு விநாயகன் சிலை ஊர்வலம் நடத்துகிறோம் என்று இந்து முன்னணி வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. இப்படி அறிவித்த பிறகும் விநாயகன் சிலை நிறுவுவோர் பெற வேண்டிய அரசுத் துறை அனுமதிகளை காவல் துறையே பெற்றுத் தருகிறது. ‘விநாயகன்’ என்பதே தமிழ் வழிபாட்டுக்குரிய கடவுளாக இருந்தது இல்லை.

புலிகேசி மன்னன் காலத்தில் மராட்டியத்துக்கு படை எடுத்துச் சென்றபோது வெற்றியின் நினைவு சின்னமாக படைத் தளபதி வாதாபியிலிருந்து தமிழகம் கொண்டு வரப்பட்டதுதான் ‘விநாயகன்’ சிலை. திலகர் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து இந்தியாவை இந்துக்களுக்கான நாடாக விடுதலை பெறவேண்டும் என்று நடத்திய போராட்டங்களுக்கு ‘விநாயகனை’ அரசியலுக்குப் பயன்படுத்தினார். அந்த மத அரசியல் மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் சுதந்திரத்துக்குப் பிறகும் தொடர்ந்தது. இந்து முன்னணி தலைவர் இராமகோபாலன், அதைத் தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்தார். அரச மரத்தடியில் இருந்த புத்தர் சிலைகளை அழித்து, அங்கே வேத மதக்காரர்கள் விநாயகன் சிலைகளை அமைத்ததாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த மத அரசியல் பெரியார் மண்ணாகிய தமிழ்நாட்டில் மக்களைப் பிளவுபடுத்தவும் மதப் பகையை உருவாக்கவுமே திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்பதை சுட்டிக்காட்டி, பெரியார் இயக்கம் தொடர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக பெரியார் கைத்தடி ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு விநாயகன் அரசியல் ஊர்வலத்துக்காக மாற்றாக மக்கள் சமத்துவத்தை உருவாக்க மார்க்கம் கண்ட புத்தர்சிலையை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

‘இந்து முன்னணி’ விநாயகன் ஊர்வலம் நடத்தும் இறுதி நாளான செப்.8ஆம் தேதி, புத்தர் சிலை, புத்தர் படங்களுடன் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் மாலை 4.30 மணியளவில் அய்ஸ்அவுஸ் பகுதியில் கழகக் கொடியுடன் திரண்டனர். விழுப்புரம், காஞ்சிபுரம், மாவட்ட கழகத் தோழர்களும், காஞ்சி மக்கள் மன்றத் தோழர்களும், புதுச்சேரியிலிருந்து பெரியார் சிந்தனையாளர் இயக்கத் தோழர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். பெரியார், அம்பேத்கர் வேடத்துடனும் தோழர்கள் பங்கேற்றனர்.

“மதவாத அரசியலுக்கு மாற்றாக மக்கள் ஒற்றுமை பேசிய புரட்சியாளர் புத்தரை முன்னிறுத்துவோம்; காவல்துறையே, மதத்தை அரசியலாக்கும் விநாயகன் சிலை ஊர்வலங்களை தடை செய்! எங்கள் நெறி புத்தர் நெறி; எங்கள் மார்க்கம் புத்தர் மார்க்கம்! என்ற முழக்கங்களை எழுப்பினர். 150 தோழர்கள் கைது செய்யப்பட்டு திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டனர். இரவு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று ஆதரவு தெரிவித்தனர். ●



## ஆய்வாளர் ஜெயரஞ்சன் பி.பி.சி.க்கு பேட்டி

# தமிழ்நாட்டைப் பாதிக்கும் ஒரே நாடு; ஒரே ரேசன் கார்டு திட்டம்

***ஒரே நாடு – ஒரே ரேசன் கார்டு திட்டம் விரைவில் தமிழ்நாட்டிலும் செயல்படுத்தப் படுமென தமிழக உணவுத் துறை அமைச்சர் ஆர்.காமராஜ் அறிவித்திருக்கிறார். இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்தத் திட்டத்தின் சாதக பாதகங்கள் குறித்து உணவுப் பாதுகாப்பு விவகாரங்களில் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும் ஆய்வறிஞர் ஜெயரஞ்சன் பேசினார். பிபிசி செய்தியாளர் முரளிதரன் காசி விஸ்வநாதனுக்கு அளித்த நேர்காணலிலிருந்து:***

***ஒரே நாடு - ஒரே ரேசன் கார்டு திட்டம் என்பது என்ன? இதை எப்படி செயல்படுத்தப்படும்?***

இந்தத் திட்டத்தின் முக்கியமான அம்சம், உணவுப் பொருள் வழங்கலை எளிமையாக்குவது (Portability) என்பதுதான். இப்போது உணவு தானியங்களை வழங்குவது என்பது மாநில அரசிடம் இருக்கிறது. ஒவ்வொரு மாநில அரசும் தனது கொள்கைக்கு ஏற்றபடி இந்த உணவு தானியங்களை நியாய விலைக்கடைகளில் வழங்குகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. யாருக் கெல்லாம் குடும்ப அட்டை இருக்கிறதோ, அவர்கள் வாங்கிக் கொள்ளலாம். இந்தியாவில் உள்ள வேறு பல மாநிலங்கள் இலக்கு சார்ந்த பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தி வந்தார்கள். யாருக்குக் கொடுக்க வேண்டுமென்பதை முடிவு செய்து, அவர்களுக்கு மட்டும் பொருட்களைக் கொடுப்பார்கள். இதுதான் தமிழகத்திற்கும் மற்ற மாநிலங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு. ஆனால், இதில் கவனிக்க வேண்டியது என்ன வென்றால், பல மாநிலங்களில் பொது விநியோகத் திட்டமே செயல்பட வில்லை என்பதுதான். இந்த ஏற்றத் தாழ்வுகளைக் களையத் தான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இருக்கும்போது 2013ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சட்டத்தின்படி கிராமப்புறங்களில் உள்ள 50 சதவீதம் பேருக்கும் நகர்ப்புறங்களில் உள்ள 75 சதவீதம் பேருக்கும் ஒரு நபருக்கு ஐந்து கிலோ உணவு தானியம், மானிய விலையில் வழங்கப்படும். ஒரு கிலோ அரிசி 3 ரூபாய்க்கும் ஒரு கிலோ கோதுமை இரண்டு ரூபாய்க்கும் வழங்கப்படும். அரிசியும் கோதுமையும் மத்திய அரசு தன் உணவுத் தொகுப்பிலிருந்து கொடுத்துவிடும். யார் யார் பயனாளிகள் எனக் கண்டறிந்து இதனை மக்க ளுக்கு விநியோகிக்க வேண்டியது மாநில அரசின் பொறுப்பு. ஆனால், தமிழ்நாட்டில் ஏற்கனவே எல்லோருக்கும் ரேசன் பொருட்களை வழங்கிவந்த நிலையில், 50 - 75 சதவீதம் பேருக்கே உணவு தானியத்தை வழங்கும் இந்தத் திட்டம் முரண்பாடாக அமைகிறது. இந்த நிலையில், தமிழக அரசு தன் பாணியில் எல்லோருக்கும் உணவு தானியங்களை விநியோகிக்க விரும்பியது. அதையே தொடர விரும்பியது. ஆனால், மத்திய அரசு தங்கள் திட்டப் படிதான் உணவு தானியங்களை வழங்குவோம் எனக் கூறியது. அதாவது கிராமப்புறங்களில் உள்ள ரேசன் கார்டுகளில் பாதி அளவுக்கும் நகர்ப் புறங்களில் 75 சதவீதம் பேருக்கும்தான் உணவு தானியங்களை வழங்குவோம். நீங்கள் விநியோகித்துக் கொள்ளுங்கள் என்றது மத்திய அரசு.

இந்த தானியங்களைப் பெற்றுக்கொள்ளும் தமிழக அரசு இரண்டு பிரிவுகளாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது:

1. தானியங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மத்திய அரசு சொல்வதைப் போல ஒரு நபருக்கு ஐந்து கிலோ என்று பார்த்து வழங்காமல் ஒரு குடும்பத்திற்கு இருபது கிலோ கொடுத்து விடுகிறார்கள்.
2. மத்திய அரசு அந்த்யோதயா அன்னயோஜனா என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அவர்களுக்கு 35 கிலோ தானியம் மத்திய அரசு வழங்குகிறது. அதனை அப்படியே கொடுத்து விடுகிறது. மாநில அரசு எல்லோருக்கும் உணவு தானியங்களைக் கொடுப்பதால், மத்தியத் தொகுப்பிலிருந்து வரும் அரிசி போதுமானதாக இருப்பதில்லை. ஆகவே வெளிச் சந்தையிலிருந்து வாங்கி, அதனை மக்களுக்கு விநியோகிக்கிறார்கள். இதில் ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசுக்கு ஐயாயிரம் முதல் ஆறாயிரம் கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகிறது. ஆனால், இப்போது எங்கு வேண்டுமானாலும் ரேசன் பொருட்களை வாங்கிக்கொள்ளலாம் என்ற திட்டத்தில் இணையும்போது பல சிக்கல்கள் வரும். அதை எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.

***ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டு வந்த உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில், இந்த ஒரே நாடு – ஒரே ரேசன் கார்டு வலியுறுத்தப்பட்டிருந்ததா?***

அவர்கள் துவக்கத்தில் உணவுப் பாதுகாப்பு குறித்து மட்டும்தான் பேசினார்கள். பிறகு ஆதார் அறிமுகமான பிறகு, அதையும் ரேசன் கார்டுகளையும் இணைக்க வேண்டுமெனக் கூறினார்கள். அப்படி இணைக்கப்பட்ட பிறகு சில வசதிகள் கிடைத்தன. அதாவது, ஆதார் எண்ணை வைத்து யாருடைய கார்டையும் அடையாளம் காண முடியும். அவர்கள் என்ன பொருட்களைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் பார்க்க முடியும். இந்த வசதியை வைத்துக்கொண்டு, நாட்டின் எந்த ஒரு கடையிலும் பொருட்கள் வாங்கலாம் என்பதை ஒரு திட்டமாக அவர்கள் முன்வைத்தார்கள். இந்தத் திட்டம் இப்போது நான்கு மாநிலங்களில் செயலில் இருக்கிறது. இன்னும் சில மாநிலங்களில் வரவிருக் கிறது. ஏப்ரல் 2020க்குள் எல்லா மாநிலங்களையும் இந்தத் திட்டத்தில் இணைக்க நினைக்கிறார்கள்.

***பொது விநியோகத் திட்டம் நன்றாக இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு வருபவர்கள் இதன் மூலம் பயன் பெறலாம். மாறாக, தமிழகம் போன்ற மாநிலங்களில் இருந்து வேறு மாநிலங்களுக்குச் செல்பவர்கள் தமிழகத்திலிருப்பதைப் போல பயன்களைப் பெற முடியாது. இது ஒரு பிரச்சனை தானே..***

அது ஒரு சிக்கல்தான். வேறு பெரிய பிரச்சனை களும் இருக்கின்றன. அவையெல்லாம் யோசிக்கப் பட்டனவா இல்லையா எனத் தெரியவில்லை. முதலாவதாக, இந்த உணவு அட்டை என்பது குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. ஆனால், அவர்கள் புலம் பெயர்ந்து வரும்போது தனி நபர்களாகத்தான் புலம் பெயர்கிறார்கள். குடும்பத்தை சொந்த ஊரில் விட்டுவிட்டு, வேறு ஊருக்கு சென்று வேலை பார்த்து பணம் அனுப்புகிறார்கள். அம்மாதிரியான சூழலில் அந்த அட்டை யார் வசம் இருக்கும்? அந்த அட்டையை புலம் பெயர்பவர் எடுத்து வந்தால், குடும்பம் என்ன செய்யும்? குடும்பத்தின் வசம் அட்டை இருந்தால், வேறு மாநிலத்திற்குச் சென்று வேலை பார்ப்பவர் எப்படி இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவார்?

இரண்டாவதாக, ஆதார் அட்டையோடு ரேசன் அட்டை இணைக்கப்படும்போது, குடும்பத் தலைவரின் எண் இணைக்கப்படுகிறது. அவர் இல்லாதபோது, அந்தக் குடும்பம் எப்படி ரேசன் பொருட்களைப் பெறுமெனத் தெரியவில்லை. மூன்றாவதாக, ரேசன் கடைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை பேர் பலன் பெறுகிறார்கள் என்பதைக் கணக்கிட்டு பொருட்கள் வருகின்றன. திடீரென ஒரு ஐநூறு புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஒரு கடையில் சென்று பொருள் கேட்டால் எப்படிக் கொடுக்க முடியும்? அரசிடம் எழுதிக் கேட்டு, அடுத்த மாதம் வாங்கித் தரலாம். ஆனால், அடுத்த மாதம் அந்தத் தொழிலாளர்கள் வேறு இடத்திற்கு புலம்பெயர்ந்திருப்பார்கள். இவர்கள் தொடர்ந்து புலம் பெயர்ந்துகொண்டேயிருப்பார்கள். இதை எப்படி கணக்கில் வைப்பது? எப்படி கிடங்கில் அதற்கேற்றபடி உணவுதானியங்களைச் சேமித்து வைப்பது? இதற்கு எப்படி திட்டமிட்டிருக்கிறார்கள் எனத் தெரியவில்லை. இன்றைக்கு தொழிலாளர்கள் வந்து கேட்டால், நாளை இந்திய உணவுக் கழக கிடங்கிலிருந்து உணவு தானியத்தை அனுப்பிவிட முடியுமா? இதற்கான தொழில்நுட்பம் நம்மிடம் இருக்கிறதா?

இதைவிட முக்கியமான விஷயம், இந்தத் திட்டத்தை செயல்படுத்த இணைய இணைப்பு வேண்டும். பல இடங்களில் இப்போதே ஆதார் குறியீட்டை இயந்திரங்களால் படிக்க முடியவில்லை. இப்போதும்கூட பல கிராமங்களில் போன் பேசவே மொட்டை மாடிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே இணைய இணைப்பைப் பற்றி எப்படி யோசிப்பது? இது தவிர, வேறொரு முக்கியமான பிரச்சனை இருக்கிறது. அதாவது, உணவு தானிய ஒதுக்கீட்டில் உள்ள பிரச்சனை. உதாரணமாக, பீகாரைச் சேர்ந்த ஒருவர் இங்கே உணவு தானியம் வாங்குகிறார் என வைத்துக்கொள்வோம். ஆகவே பீகாருக்கு உணவு தானியம் ஒதுக்கீடு செய்யும்போது, அவருக்கான அளவைக் குறைத்துவிட்டு, தமிழகத்திற்கு அதனை அதிகரித்துத் தரவேண்டும். இதை எப்படிச் செய்யப் போகிறார்கள்? ஒரே மாதிரிதான் விநியோகிக்க வேண்டுமென்றால் தமிழகம் என்ன செய்யும்?

***இந்தத் திட்டத்தினால், அந்தந்த மாநிலத்தில் வசிக்கும் மக்கள் வழக்கம்போல பொருட்களை வாங்குவதில் பிரச்சனை வருமா?***

பெரிதாக பிரச்சனை வராது. ஏற்கனவே உள்ள நடைமுறை தொடரும். ஆனால், ஒரே நாடு - ஒரு கார்டு திட்டத்தில் இணைந்து சில நாட்களுக்குப் பிறகு, எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் விநியோகிக்க வேண்டுமெனக் கூறினால், தமிழ்நாடுபோல கூடுதலாக உணவு தானியங்களை இலவசமாக வழங்கி வரும் மாநிலங்கள் என்ன செய்ய முடியுமெனத் தெரியவில்லை. இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு பெரும் அளவில் நிதி வழங்குகிறது. நாங்கள் சொல்வதுபடி செய்தால்தான் நிதியளிக்க முடியும். இல்லாவிட்டால் நீங்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டுமெனக் கூறினால், ஏற்கனவே நிதிச் சுமையில் உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் என்ன செய்ய முடியும்?

***நிதி ரீதியான சிக்கல்களைத் தவிர, வேறு ஏதாவது சிக்கல்கள் இந்தத் திட்டத்தால் இருக்கிறதா?***

மானியங்களைக் கொடுக்க ஏற்படும் சிக்கல்தான் பெரிய சிக்கல். ஏனென்றால், கடந்த சில மாதங்களாகவே எதிர்பார்த்த அளவுக்கு வரி வசூலாகவில்லை. இது மத்திய அரசை மட்டும் பாதிக்காது. மாநில அரசுகளையும் பாதிக்கும். மாநில அரசுகள் வசூலிக்கும் வரியும் குறையும். மத்தியத் தொகுப்பிலிருந்து வரும் வருவாயும் குறையும். மேலும், மத்திய அரசு பல வரிகளை, செஸ் (Cess) எனப்படும் சிறப்பு நிதியாக வசூலிக்கிறது. அவற்றை மாநிலங்களோடு பிரித்துக்கொள்ளத் தேவையில்லை. இப்போது ரிசர்வ் வங்கியிலிருந்து 1.76 லட்சம் கோடி ரூபாயைப் பெற்றார்கள். அதையும் மாநிலங்களோடு பகிரத் தேவையில்லை. இப்படி தொடர்ச்சியாக மாநில அரசுகளின் வரி வருவாய் குறைந்துகொண்டே போகிறது. ஆகவே மாநில அரசுகளால் புதிதாக எதையும் செய்வதற்கான இடமே இருக்காது.

ஒரே நாடு - ஒரே ரேசன் கார்டு திட்டத்தை அறி முகப்படுத்தினால், எதிர்காலத்தில் எல்லோருக்குமான ரேசன் திட்டம் நிறுத்தப்படலாம் என்ற அச்சம் இருக்கிறது. ஆனால், வசதியானவர்களுக்கு எதற்காக ரேசன் பொருட்களைக் கொடுக்க வேண்டும் என்ற கேள்வி இருக்கிறது

உணவுப் பொருட்களைக் கொடுக்கும்போது யாருக்கு அவற்றைக் கொடுப்பது என அடையாளம் காண்பது சிக்கலான வேலை. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குக் கொடுக்கலாம் என்கிறார்கள். இவர்கள் யாருக்குமே வறுமைக் கோட்டை எப்படி கணக்கிடுவது என்பதே தெரியாது. காரணம் வருவாயைப் பற்றி விவரங்கள் நம்மிடம் துல்லியமாக இல்லை. இந்தியாவில் இப்போதுவரை வருவாயைப் பற்றிய புள்ளிவிவரங்கள் கிடையாது. செலவைப் பற்றிய விவரங்கள் மட்டுமே உண்டு. காரணம், பெரும்பாலானவர்கள் அமைப்புசாராத் தொழில் களில் இருக்கிறார்கள். இதனால், செலவுசெய்வதை வைத்து வறுமைக் கோட்டை தீர்மானிக்கிறார்கள். அப்படி இருக்கும்போது அதனை வைத்து உணவு தானியம் பெறுவதற்கு ஒருவர் தகுதியா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியாது. அதையும் மீறி, ஒரு கோட்டை வைத்து, அதற்குக் கீழ் இருப்பவர் களுக்குத்தான் உணவு தானியம் என்று சொன்னால், தேவையான பலர் விடுபடும் வாய்ப்பு இருக்கிறது. இது பல ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

தேவையில்லாத சிலர் இதனால் பயன் பெறுவார்களே என்று கேட்கிறீர்கள். சமுதாய அக்கறை உள்ளவர்கள், ஆட்சியில் உள்ளவர்கள் மேலே சொன்ன இரண்டில் எது மோசமானது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அதாவது, தேவையில்லாத சிலர் பயன்பெறுவது மோசமானதா, அல்லது தேவையுள்ள சிலருக்கு பொருட்கள் கிடைக்காமல் அவர்கள் பட்டினி கிடப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஒரு மக்கள் நல அரசு பட்டினியில் இருப்பவர் வாடக்கூடாது என்றுதான் நினைக்கும்.

●

## கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு விளக்கம்

# திறப்பதற்குப் பதிலாகக் கல்வி நிலையங்களை மூடுவதற்குப் பரிந்துரைக்கும் கல்விக் கொள்கை

*புதிய கல்விக் கொள்கை – இடஒதுக்கீடு குறித்தோ ஜாதி பிரச்சினைப் பற்றியோ பேசாமல் மூடுவதற்கான பரிந்துரைகளையே வலியுறுத்துகிறது என்றார் கல்வியாளர் கஜேந்திர பாபு. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

70 ஆண்டுகாலம் கழித்து வரக்கூடிய தேசிய கல்விக் கொள்கையில் ஜாதியக் கொடுமையைப் பற்றி இருக்க வேண்டும் என்று நான் எதிர் பார்ப்பேனா? மாட்டேனா? வாழ வேண்டிய வயதில், படித்த இளைஞர்களை ஜாதியின் பெயரால் கொலை செய்கிறார்களே அதைப் பற்றி எதாவது இந்த அறிக்கையில் இருக்கிறதா? அப்படி இருந்தால் வரவேற்கலாம். Multi Discipline என்று சொல் கிறார்களே! அப்படி என்றால் என்ன? Tradition, Ethics யை கற்றுக் கொடுக்க சொல்கிறார்களே! எந்த Tradition யை கற்றுக் கொடுப்பது? அச்சம், நாணம், மடமை இவையெல்லாம் யாருக்கு இருக்கும் குணம்? நாய்க்கு இருக்கும் குணமென்று பாரதியார் சொல்கிறார். பெண்ணைப் பார்த்து அச்சம் கொள்ளாதே என்று சொன்னார். அது தான் Tradition, புத்தகத்தில் வருமா அது? மூன்று வருடம் BSc Chemistry, BSc Maths போன்ற மூன்று வருட பட்டப் படிப்பு படிக்கிறார்கள். மூன்று வருடம் BSc Chemistry பயின்ற ஒருவருக்கு Chemistry பற்றி எதுவுமே தெரியவில்லை என்பதை எங்கேயாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? மூன்று வருடம் பயில்கின்ற மாணவன் Physics, Chemistryயைப் பயில்கிறான். இதில் என்ன குறை உள்ளதென்று, நான்கு வருட படிப்பை கொண்டு வருகிறீர்கள்? மூன்று வருட படிப்பை நான்கு வருடமாக எந்த காரணத்திற்காக மாற்று கிறீர்கள்? அதற்குப் பெயர் Liberal Bachelors Degree and Bachelor's of Liberal Arts. Multiple Exit and Multiple Entry, வெளியே போகலாம், உள்ளே வரலாம். எப்போது வேண்டுமென்றாலும் படிக்கலாம். அப்படியென்றால் ஒரு மாணவன் எப்போது BSc Physics முடிப்பது? தற்போது இருக்கும் நடைமுறையை நிறுத்து வதற்கான அவசியம் என்ன? இந்த வரைவில், அங்கன்வாடி பள்ளிக்கூடங்களில் வேலை செய்பவர்கள் கூட நான்கு வருடம் பயில வேண்டுமாம். இதை, பல்கலையில் உள்ள Education Departmentஇல் படிக்க வேண்டுமாம். அங்கன்வாடி பள்ளிக்கூடங்களில் வேலை செய்பவர்கள், ஒரு வருடமோ, இரண்டு வருடமோ அதற்குண்டான தகுதியுடன் இருக்கும் போது நான்கு வருட படிப்பு என்பது சரியாகுமா?

அது மட்டும் இல்லை நண்பர்களே மூன்று வகையான கல்லூரிகள் தான் இருக்க வேண்டுமாம். அதாவது உயர்கல்வி கல்லூரிகள் இல்லை உயர்கல்வி நிறுவனங்கள், Type 1,Type 2, Type 3. Type 1 - Research Institute என்பது 5000 முதல் 25000 பேர் வரை படிக்கக் கூடிய பெரிய வளாகம். Type 2- Teacher Research Institute, ஆசிரியர்களுக்கான ஆய்வுப் பல்கலைக் கழகம். Type 3 இதில் பல்கலைக் கழகம் பட்டம் அளிக்காது, ஒரு பகுதியில் உள்ள அரசு கலைக் கல்லூரி தானே பட்டத்தை அளிக்குமாம். கல்லூரியாக வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு கல்லூரியை பல்கலைக் கழகமாக தகுதியை வளர்த்துக் கொள் என்றால்! அதற்கான நிதி வேண்டுமல்லவா? ஒரு தனியார் கல்லூரி பல வழிகளில் நிதி திரட்டி பல்கலைக் கழகமாக வளரலாம் ஆனால் அரசுக் கல்லூரிக்கு அது சாத்தியமாகுமா? அதுவும் பத்தாண்டுகளுக்குள் மாற வேண்டும் என்று காலக் கெடுவும் விதித்திருக் கிறார்கள். 2032க்குள் இந்த வகையான கல்லூரிகள் பட்டம் அளிக்கும் கல்லூரிகளாக மாற வேண்டும். ஒரு வேளை மாறவில்லை என்றால் எந்த பல்கலைக் கழகம் ஏற்பு கொடுத்ததோ அதனுடன் இணைந்து கொள்ள வேண்டும். கல்லூரி இணைப்பு என்பது கட்டிடங்களை இணைப்பதா இல்லை கல்லூரி களில் இருக்கும் மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு மாற்றப் போகிறார்கள். அதான் தான் 25000 பேர் வரை பயிலும் வளாகம். Type 1 University. அப்போது அந்த கல்லூரி வளாகம் வேறு பயன் பாட்டிற்கு விடப்படும். ஒரு கல்வி கொள்கை என்பது கல்லூரியை திறக்க வேண்டுமா? அல்லது மூட வேண்டுமா?

நம் காமராசர் , பெரியார் எதை சிந்தித்தாரோ அதைச் செய்தார். கோவையில் உள்ள ஒரு தொழிலதிபர், 20% பணத்தை நான் தருகிறேன் மீதியை அரசின் சார்பில் தாருங்கள் மருத்துவக் கல்லூரியை




**பள்ளிக்கூடம் திறக்க பணமில்லாத காலத்தில் காமராசரால் அரசு மருத்துவக் கல்லூரியை திறக்க முடிகிறது. அதற்குப் பெயர் தான் அரசு, அதன் பெயர் தான் மக்களாட்சி, ஜனநாயகம்.**

நான் திறக்கிறேன் என்று ஒரு கோரிக்கை வைத்தார். அடுத்த நாளே அரசின் சார்பில் அரசு மருத்துவக் கல்லூரி திறக்கப்படும் என்று அறிவிப்பை வெளியிட்டார். பள்ளிக்கூடம் திறக்க பணமில்லாத காலத்தில் காமராசரால் அரசு மருத்துவக் கல்லூரியை திறக்க முடிகிறது. அதற்குப் பெயர் தான் அரசு, அதன் பெயர் தான் மக்களாட்சி, ஜனநாயகம். இது போன்று, ஒரு கல்விக் கொள்கையில் எதிர் பார்ப்பேனா மாட்டேனா? திறப்பதற்கு பதில் மூடுவதற்கான அனைத்தையும் இந்த வரைவில் கூறியிருக்கிறார்கள்.

National Research Foundation என்று ஒன்றை கூறியிருக்கிறார்கள். இந்த அமைப்பு தான் இனி ஆய்வுகளுக்கான உதவித் தொகையை வழங்குமாம். இந்த கொள்கை என்ன கூறுகிறதென்றால் இதற்கு பல்வேறு அமைப்புகளை உருவாக்குவார்கள். இந்த அமைப்புகளை நியமிக்கிறது யார் என்றால். இராஷ்ட்ரிய சிக்ஷா ஆயோக் மற்றும் தேசியக் கல்வி ஆணையம் இதற்கு தலைவர் பிரதமர் ஆவார். இந்த குழுக்கள்தான் நாம் அனுப்பக்கூடிய ஆய்வுகளை நாட்டிற்கு அல்லது மாநிலத்திற்கு பயனுள்ளதா, இல்லையா என்பதை ஆராய்ந்து, பயனுள்ளது என்றால் உதவித் தொகையை கொடுப்பார்களாம். அது மட்டுமில்லாமல் நம் சக மாணவர்களிடத்திலும் ஆய்வு பற்றி கருத்து கேட்பார்களாம். சமூக மேம்பாட்டிற்கான ஆய்வு என்பது ஒரு மாணவன் விரும்பக்கூடியது தானே, ஆனால் இந்த வரைவில் மாணவர் விரும்பக் கூடியதை பார்க்காமல் பயனுள்ளதா இல்லையா என்பதை பார்ப்பது என்பது கல்வியியல் சுதந்திரத்திற்கு ஏற்புடையதா? இந்த வரைவில் இட ஒதுக்கீட்டைப் பற்றி எங்கேயும் கூறவில்லை. 'தகுதி' மட்டுமே உள்ளது. பலவீனமாக இருக்கக் கூடிய அரசுப் பள்ளிகளை ஒன்றாக இணைத்துவிடுவார்களாம். மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் பள்ளிக்கூடங்களை இணைத்துவிட வேண்டும் அல்லது பள்ளி வளாகத்தில் இணைக்க வேண்டுமாம். பள்ளி வளாகங்களில் அங்கன்வாடி, தொடக்கப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என அனைத்தும் இருக்குமாம். இந்த வளாகத்தில் அனைத்து வசதிகளும் இருக்கும் இந்த வசதிகள் 10 அல்லது 15 பள்ளிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும். பெண் குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றி இந்த வரைவு மிகவும் கவலைப்படுகிறது. அதாவது பெண் குழந்தைகள் பாதுகாப்பாக பள்ளிக்கூடம் சென்று வர ஊதியம் கொடுத்து பாதுகாவலர்களை நியமிப்பதாக இந்த வரைவு கூறுகிறது. உள்ளூர் சமூகத்தில் வேலை இல்லாதவர்களை வர வைத்து சைக்கிள் ரிக்ஷாவில் பெண் குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் விட்டு வர வைத்து அவர்களுக்கு பணம் கொடுப்பதாகவும் இந்த வரைவில் உள்ளது. அடுத்தது வீட்டில் உள்ள வயதானவர்கள் பெண் குழந்தைகளுடன் பள்ளிக்கூடம் வரை நடந்து வர வேண்டுமாம். இது ஒரு அரசின் கல்விக் கொள்கையாம். வீட்டிற்கு அருகில் பள்ளிக்கூடம் இருப்பது பாதுகாப்பா? இல்லை தொலைவில் பள்ளிக்கூடத்தை வைத்துவிட்டு பணம் கொடுத்து பாதுகாவலர்களை கூட அனுப்புவேன் என்பது பாதுகாப்பா? பொதுப் பள்ளிகளைப் பற்றி பேசாமல், தனியார் பள்ளிகளுக்கு எந்தக் கட்டுப்பாடும் விதிக்காமல், எண்ணிக்கை குறைவாக இருந்தால் அரசுப் பள்ளிகளை இணைத்து விட வேண்டும் என்பது எப்படி சரியான கொள்கை யாகும்?

3 வயது முதல் 8 வயது வரை வாழ்வாதாரத்திற்கான வாழ்க்கைத் திறன்களை வளர்க்கும் கல்வியை தருவார்களாம். தோட்டக் கலை, மண் பொம்மைகள் செய்வது, தச்சு வேலை, மின்சார வேலை போன்றவைகளை கூறிவிட்டு அதற்கு அறிக்கைக் கொடுக்கும் விளக்கம்; மூன்று வயதிலேயே திருஞான சம்பந்தர் 'தேவாரம்' பாடியிருக்கிறார், நான்கு வயதில் 1330 குறளை ஒப்பிக்கக் கூடிய குழந்தை இருக்கிறது, எனவே உங்கள் குழந்தைகளின். திறனை குறைத்து மதிப்பிடாதீர்கள் என்று கூறியிருக்கிறது வரைவு. 3 முதல் 14 வயதிற்குள் தொழிற் கல்வியை கற்றுக் கொடுக்க சொல்கிறது இந்த வரைவு. 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை ஒன்றாக இணைக்க வேண்டுமாம். ஏனென்றால் தற்போது மாணவர்கள் மன இறுக்கத்தில் படிக்கிறார்களாம். அதனால் 8 'செமஸ்டர்' தேர்வு நடத்துவார்களாம். எப்போது மாணவர் விரும்புகிறாரோ அப்போது எழுதலாமாம். 8 'செமஸ்டரி'ல் ஒரு 'செமஸ்டர்'க்கு 3 பாடங்கள் அப்போ 8 'செமஸ்டர்' க்கு 24 அது மட்டுமில்லாமல் 14 பாடங்கள் மொத்தம் 40 இல் 24 இல் மட்டும் தேர்வானால் போதும்.மேலும், இணையம் வழியாக தேர்வு நடத்தப்படும் போது மாதம் மாதம் கூட எழுதலாமாம். அதனால் எப்போது ஒரு மாணவர் தயாராகிறாரோ அப்போது எழுதிக் கொள்ளலாம். அப்போ நமது சமூக அமைப்பின்படி 12 ம் வகுப்பை நமது மாணவர்கள் இந்த முறையினால் தாண்ட முடியுமா? அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற முடியுமா? அப்போ 12 ம் வகுப்பு முடித்தால் தானே கல்லூரி இல்லையென்றால் தொழிற்கல்வி. இப்போது புரிகிறதா தொழிற் கல்வி எதற்கென்று?

தாய் மொழி உயிர் காக்கும் மருந்தைப்போல கட்டாயமாக படிக்க வேண்டும். ஆங்கிலமென்பது தேவைக்காக படிக்க வேண்டும். மூன்றாவது மொழி எனக்கு எப்போது தேவையோ அப்போது படித்துக் கொள்கிறேன் இப்போது அதற்கு அவசியம் என்ன? மூன்றாவது மொழி படிக்கும் நேரத்தில் நான் கணிதம் படிக்கக் கூடாதா? அறிவியல் படிக்கக் கூடாதா? விளையாடக் கூடாதா? என் நேரத்தை திருடுவதற்கு நீங்கள் யார்? எந்த மொழி மூன்றாவது மொழி என்று கூறவில்லையென்றாலும் மும்மொழி என்பது கட்டாயம் தானே! சமமான கற்றல் வாய்ப்பைக் கேட்டால் மும்மொழியை ஏன் திணிக்கிறீர்கள்? அதன் பின் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றாலும் National Testing Agency Aptitude Test நடத்துவார்கள். அதாவது 12ஆம் வகுப்பில் நீங்கள் தேர்ச்சியே பெற்றிருந்தாலும் உயர்கல்விக்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதை Aptitude Test வைத்து தீர்மானிப்பார்கள். அதிலும் இந்த தேர்விற்கு எப்போது வேண்டுமானாலும் படித்து எழுதிக் கொள்ளலாம். 12ஆம் வகுப்பு முடிக்கும் போதே மாணவர்களுக்கு வயது 18. இந்தத் தேர்விற்கு படித்து எழுதி தேர்வாகி உயர்கல்வியில் சேரும் போது என்ன வயதாகி இருக்கும்? குறிப்பாக பெண்களுக்கு. அவர்களால் அதற்கு மேல் கல்வியை தொடர முடியுமா? அப்போ இந்த வரைவு எதற்கான தடைகளை கொண்டுள்ளது உயர் கல்விக்கான தடைகளை வைத்தே உருவாக்கப்பட்டிருக்கிறது. இத்தனை தடைகளையும் தாண்டி வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறையும். அதனால் தான் கல்லூரிகளையும் இணைக்கச் சொல்லி இந்த வரைவு பரிந்துரைக்கிறது. அது மட்டுமில்லாமல், பல்கலைக்கழகங்களிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறையும் தானே அதனால் தான் International Students க்கும் அனுமதி உண்டாம். அவர்களுக்கு உதவித் தொகையும் உண்டாம்.

(தொடரும்)


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஜம்மு-காஷ்மீரில் என்ன நடக்கிறது?

*ஜம்முவில் நடக்கும் இராணுவ ஆட்சி மக்களின் அன்றாட வாழ்க்கையை சீர்குலைத்து வீடுகளில் முடக்கி வைத்து விட்டது.*

- ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை, ஆகஸ்ட் 5ஆம் தேதி முதல், ராணுவப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சரியாக ஒரு மாதமாகிவிட்டது. ஒரு மாதத்திற்கும் மேலாக காஷ்மீர் மக்களிடமிருந்து அடிப்படை உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டுவிட்டன. அவர்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். செல்பேசி, தரைவழித் தொலை பேசி, இணையத்தின் மூலம் தொடர்பு கொள்ளுதல் என எவ்விதமான தகவல் தொடர்பும் அவர்களுக்குக் கிடையாது. பிரதான சாலைகள் அனைத்திலும் பாதுகாப்புப் படையினரின் தடுப்பரண்கள் வைக்கப்பட் டிருப்பதாலும், பொதுப் போக்குவரத்து இல்லாததாலும் மக்கள் தங்கள் இல்லங்களிலிருந்து எங்கும் செல்வதற்கான உரிமை பறிக்கப் பட்டவர்களாக இருந்து வருகிறார்கள்.

- அரசு ஊழியர்கள் தங்கள் அலுவலகங்களுக்கு வரமுடியாத சூழ்நிலை இருப்பதால் அரசு அலுவலகங்கள் செயல்படவில்லை. செய்தித்தாள்கள் தங்கள் பதிப்புகளை வெளியிட முடியவில்லை. தகவல் தொடர்பு சாதனங்களுக்குத் தடை விதிக்கப்பட் டிருப்பதால் ஊடகவியலாளர்களால் தங்கள் செய்தி நிறுவனங்களுக்கு முறையாக செய்திகளை அனுப்ப முடியாததே இதற்குக் காரணமாகும்.

- மாநிலத்தின் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தடுப்புக்காவலில் தொடர்ந்து வைக்கப்பட்டிருக் கிறார்கள். அனைத்து ஹுரியத் இயக்கத் தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். காஷ்மீர் பள்ளத்தாக்கின் உண்மை நிலைமைகள் குறித்து எவரேனும் வாய்திறந்தால் அவரும் தடுப்புக் காவலில் வைக்கப்படுகிறார். மக்களுக்கு மருத்துவ சேவை செய்திட மருந்துகள் கிடைக்க வில்லை என்று ஒரு மருத்துவர் தன் கவலையைத் தெரிவித்தபோது அவரும் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டிருக்கிறார். கடந்த 30 நாட்களில் கொடூரமான, பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 250க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

- ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதாக அரசாங்கத்தின் தரப்பில் கூறப்படுகிறது. எனினும் எதார்த்த நிலையில் எவ்வித வேறுபாடும் இல்லை. தரைவழித் தொலைபேசி இணைப்புகள் சரிசெய்யப்பட்டு விட்டன என்று அதிகாரிகள் கூறிவந்தபோதிலும், மாநிலத்தின் பல இடங்களில் அவை வேலை செய்யவில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்பு பத்தாம் வகுப்பு வரையிலும் உள்ள பள்ளிக்கூடங்கள் அனைத்தும் திறக்கப்பட்டுவிட்டன என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. ஆனாலும், மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வருவது என்பது அநேகமாக இல்லை. மக்கள் மருத்துவமனைகளுக்கு செல்ல முடியவில்லை. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தபின், கடந்த ஒரு மாத காலத்தில் ஆயுஷ்மான் பாரத் தேசிய சுகாதார இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் ஒருவர் கூட பயன்பெறவில்லை என்று அரசாங்கத்தின் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள மருத்துவ அறிக்கையிலிருந்தே அங்குள்ள பரிதாப நிலையை நன்கு தெரிந்துகொள்ள முடியும். எகனாமிக் டைம்ஸ் நாளேட்டில் ஆகஸ்ட் 29 அன்று வெளியான ஒரு செய்தியின்படி, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் 14 லட்சம் இ-கார்டுகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன என்றும், இதில் ஆகஸ்ட் 5 வரை 22 ஆயிரம் பேர் மருத்துவ சிகிச்சை பெற்றிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது. எனினும், மாநிலம், பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டபின்னர், மூன்று வாரங்களில், இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்ட நோயாளிகள் எண்ணிக்கை என்பது “அநேகமாக பூஜ்யம்” ஆகக் குறைந்துவிட்டது.

- இப்போது அம்மாநிலத்தில் புதியதொரு போக்கு உருவாகி இருக்கிறது. வீடுகளிலிருந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, இழுத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்கள் ஏன் கைது செய்யப்படுகிறார்கள் என்பதற்கான காரணம் எதையும் குடும்பத்தினருக்குக் கூறுவதில்லை. கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப் பட்டவர்களை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதும் தெரிவிக்கப்படுவதில்லை. இது, குடும்பங்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

- வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்னர், சௌராவில் நடைபெற்றது போன்று கிளர்ச்சிகள் எங்கேனும் நடைபெற்றால், அவை மிகவும் கொடூரமானமுறையில் பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்தி நசுக்கப்படுகின்றன. அரசுத் தரப்பில் மூடி மறைத்த போதிலும், பெல்லட் குண்டுகளால் காயம் அடைந்த இளைஞர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சைகள் பெற்றுவரும் தகவல்கள் செய்திகளாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. பெல்லட்குண்டு காயங்களினால் ஏற்பட்ட முதல் மரணம் குறித்து செப்டம்பர் 3 அன்று பிடிஐ செய்தி நிறுவனத்தால் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. சௌராவில் நடைபெற்ற சம்பவத்தில் காயங்கள் அடைந்த அஸ்ரார் அகமது கான் என்பவர் மரணம் அடைந்துள்ளார்.

- காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழும் குடிமக்களைப் பொறுத்தவரைக்கும் அரசமைப்புச் சட்டத்தின் 19 மற்றும் 21ஆவது பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் நசுக்கப்பட்டிருக்கின்றன. இதில் மிகவும் கவலை தரும் விஷயம் என்னவென்றால், ஜம்மு-காஷ்மீர் மாநில மக்களின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தலையிடுவது தன் வேலையல்ல என்கிற முறையில் உச்சநீதிமன்றம் நினைத்துக் கொண்டிருப்பதாகும். இது தொடர்பாக எண்ணற்ற மனுக்கள் அதனிடம் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின்மீது உரிய நடவடிக்கைகள் எதுவும் உச்சநீதிமன்றத்தால் இதுவரை எடுக்கப்படவில்லை.

- அரசமைப்புச் சட்டத்தின் 370ஆவது பிரிவு இரத்து செய்யப் பட்டதைத் தொடர்ந்து ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தாங்கிக் கொள்ளாமல், கண்ணன் கோபிநாதன், அய்.ஏ.எஸ். தன் பதவியை ராஜினாமா செய்தார். அதேபோன்று கர்நாடக மாநிலத்தில் பணிபுரியும் அய்ஏஎஸ் அதிகாரியான சசிகாந்த் செந்தில் என்பவரும் தன் பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.

நம் நாட்டின் பன்முக ஜனநாயகத் தன்மை சமரசத்திற்கு உள்ளாக்கப்பட்டு அடிப்படைக் கட்டமைப்பே தகர்க்கப்படும்போது அய்ஏஎஸ் அதிகாரியாகத் தொடர்ந்து பணியாற்றுவது ‘நெறிமுறையற்ற’ (‘unethical’) செயலாகும் என்று சசிகாந்த் செந்தில் கூறுகிறார்.

எஸ். சசிகாந்த் செந்தில், 2009ஆம் ஆண்டு அணியில் கர்நாடக ஐஏஎஸ் அதிகாரியாக சேர்ந்தவர். தற்போது தட்சிண கன்னட மாவட்டத்தில் துணை ஆணையராக இருந்து வருகிறார். இவர் வெள்ளிக்கிழமையன்று தன் பதவியை ராஜினாமா செய்தார். வரவிருக்கும் நாட்கள், நாட்டின் அடிப்படை வலைப் பின்னலுக்கு மிகவும் சவாலாக இருக்கும்.

எனவே, ஓர் அய்ஏஎஸ் அதிகாரியாக இருந்து பணியாற்றுவதைவிட வெளியிலிருந்து என் பணியைத் தொடர்வதே சிறந்தது என்று சசிகாந்த் செந்தில் கூறியுள்ளார். 40 வயதாகும் சசிகாந்த் செந்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். திருச்சியில் உள்ள பாரதி தாசன் பல்கலைக்கழகத்தின் ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் பி.இ. (எலக்ட்ரானிக்ஸ்) தேர்ச்சி பெற்றவர்.

# பொருளாதார நெருக்கடி: சில தகவல்கள்...

- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இந்தக் காலாண்டில் 8 சதவீதம் எதிர்பார்க்கப்பட்டது 5 சதவீதமாக குறைந்துள்ளது.

- நிலக்கரி, உரம், சிமெண்ட், மின்சாரம் போன்ற எட்டு முக்கிய தொழில் துறைகளில் 7.3 சதவீதம் இருந்த வளர்ச்சி இன்று 2.1 சதவீதமாக குறைந்துள்ளது. கட்டுமானத் துறை வளர்ச்சி விகிதம் ஒன்றரை ஆண்டு களில் காணாத சரிவை சந்தித் துள்ளது.

- ஒரே ஆண்டில் (2018லிருந்து 2019க்குள்) வங்கி மோசடி நாற்பதாயிரம் கோடி ரூபாயிலிருந்து எழுபதாயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது (இது 2013இல் வெறும் பத்தாயிரம் கோடியாக இருந்தது). சென்ற 5 ஆண்டுகளில் 5.56 இலட்சம் கோடி வாராக் கடன் தள்ளுபடி செய்யப் பட்டது. அதன் பிறகும் பெரிய தொகையில் கடன் பெற்று திருப்பித் தர முடியாதோர் எண்ணிக்கை 60 சதவீதம் உயர்ந்துள்ளது.

- கடந்த 30 ஆண்டுகளில் பொருளா தாரம் மிக மோசமான நிலையை அடைந்திருக்கிறது. வாகன உற்பத்தித் துறை மிகவும் சரிவை கண்டுள்ளது. விற்பனை 19 சதவீதம் சரிந்துள்ளது. எப்.எம்.சி.ஜி. எனப்படும் விரைவாக விற்பனையாகும் பொருள்களின் துறையில் (பேஸ்ட், பல்ப், பிஸ்கெட் போன்ற பொருள்கள்) கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் விற்பனை வளர்ச்சி, நகரங்களைவிட குறைவாக உள்ளது.

- 15 கோடி மக்கள் வேலை பார்க்கும் விவசாய கூலித் துறையில் ஊதிய அளவு கடந்த இரண்டு ஆண்டுகளில் வெறும் 3.8 சதவீதம் தான் உயர்ந் துள்ளது - விலைவாசி உயர்வே இதை விட அதிகமாக 4 சதவீதமாக இருந்தது.

- விவசாயத்தை எடுத்துக் கொண்டால், நெல் உற்பத்தி, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 13 சதவீதம் சரிந் துள்ளது. நெல்லின் குறைந்தபட்ச ஆதாய விலையை அரசாங்கம் வெறும் 4 சதவீதமாக மட்டுமே உயர்த்தியுள்ளது.

- 2011இல், உள்நாட்டு உற்பத்தியில் 34.3 சதவீதம் குடும்ப சேமிப்பாகும். ஆனால் அது 28.8 சதவீதமாக குறைந்துள்ளது.

- இக்காலக்கட்டத்தில் வேலை இழப்புகள் அதிகரித்துள்ளன. வேலைமையின்மை விகிதம் 2017இல் 4.5 சதவீதமாக இருந்தது. இன்று 7.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. இன்னும் 10 இலட்சம் வேலைகள் போகலாம் என அச்சுறுத்துகிறார்கள்.

- வேலை இழப்பு, அய்.டி. துறையையும் பாதிக்க துவங்கியுள்ளது - முக்கியமாக காக்னிசன்ட் கம்பெனி சமீபத்தில் 800 பணியாட்களை வேலையிலிருந்து விடுவித்துள்ளது.

- பன்னாட்டு அளவில், டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருகிறது. 2014இல் 60.25ஆக இருந்தது, இன்று 72.33 ஆக சரிந்துள்ளது. இதன் விளைவாக, பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியமான முதலீட்டு வளர்ச்சி, சென்ற ஆண்டு 12 சதவீதமாக இருந்தது, இந்த ஆண்டு வெறும் 5 சதவீதமாக குறைந்துள்ளது.

- டாலர் உயர்ந்தால் ஏற்றுமதித் துறை இலாபம் அடையும் என்கின்றனர். அதுவும் உண்மையல்ல. 2011இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24.5 சதவீதமாக இருந்த ஏற்றுமதி இன்று 19.6 சதவீதமாக குறைத்துள்ளது.

- நூல், தறி ஏற்றுமதி கடுமையாக சரிந்து, துணி உற்பத்தித் துறையிலும் கடும் வேலையிழப்பு ஏற்படும். பண மதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி.யால் பெரிதும் பாதிக்கப்பட்ட, பெருவாரி மக்கள் வேலை பார்க்கும் சிறு/குறு தொழில் துறைகள் வாங்கும் கடன் அளவும் குறைந்துள்ளதால், அங்கும் கடும் வேலை இழப்பு ஏற்பட்டு வருகிறது.

# குடியாத்தம் இரா.ப.சிவா– ஜெ.பிரவினா மணவிழா




திராவிடர் விடுதலைக் கழகம் வேலூர் மாவட்ட செயலாளர் இரா.ப.சிவா-ஜெ.பிரவினா ஆகியோரது வாழ்விணை ஏற்பு விழா 01.09.2019 அன்று காலை 10 மணியளவில் குடியாத்தம், அம்மணாங்குப்பத்தில் உள்ள மதுரா மஹாலில் நடைபெற்றது. நிகழ்விற்கு ஜெ.செந்தமிழ் வரவேற்பு கூறினார்.

மருத்துவர் நா.எழிலன் (இளைஞர் சங்கம்), பால்.பிரபாகரன் (கழகப் பரப்புரைச் செயலாளர்), ப.திலிபன் (வேலூர் மாவட்ட செயலாளர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருமணத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி வாழ்த்துரை வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th September 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN